



மதுரை வடக்கு மாவட்டம் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அலங்காநல்லூர் அருகில் உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் தென் மாவட்டங்களில் இதுவரை இல்லாத வகையில் தொடர் ஜல்லிக்கட்டு போட்டியை இரண்டாவது நாளாக நேற்று மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றதை தொடர்ந்து கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் பங்கேற்ற ஆயிரம் ஜல்லிக்கட்டு காளைகள் மற்றும் 500 மாடுபிடி வீரர்கள் அனைவருக்கும் தங்கக் காசுகள், சைக்கிள், எல்இடி டிவி, மிக்ஸி உள்ளிட்ட விலை உயர்ந்த பரிசு பொருட்களை லாரிகளில் குவியல் குவியலாக வைக்கப்பட்டிருந்த பரிசு குவியலில் இருந்து எடுத்துக் கொடுத்தார். இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ, வருவாய் துறை அதிகாரிகள், தி.மு.க.வினர் பங்கேற்றனர். மேலும் விழாவினை பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மின்விசிறியுடன் கூடிய பார்வையாளர் மாடத்தில் இருந்தவாறே உற்சாகத்துடன் கண்டு ரசித்தனர்.

# இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, பிப். 13-

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க, செயற்குழு கூட்டம் 17.02.2025 திங்கட்கிழமை மாலை 4.00 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் A.K.சுந்தரமூர்த்தியின்



தலைமையில் மாவட்ட தி.மு.க அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) நடைபெறும்.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணி களின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1.மார்ச்1, திராவிட மாடல் நாயகர், கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா குறித்து.

2.கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு ஆர்.காந்தி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# என்.ஆர். காங்கிரஸ் - பா.ஜ.க. அரசால் புதுச்சேரிக்கு எந்தப் பயனும் இல்லை!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தாக்கு!

புதுச்சேரி, பிப். 13-

புதுச்சேரி சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: -

மாநில வளர்ச்சிக்காக, நிதிக் கமிஷனில் புதுச்சேரியைச் சேர்க்க, மாநிலத்தின் கடன்களை தள்ளுபடி செய்ய, புதிய திட்டங்களை செயல்படுத்த கூடுதல் நிதி பெற முதல்வர் டெல்லி சென்று பிரதமரை சந்திக்காமல் இருப்பது ஏன்?. ஒவ்வொரு ஆண்டும் திட்டக்குழு கூடி ஒன்றிய அரசுக்கு கோரும் கூடுதல் நிதியை தொடர்ந்து வழங்காமல் ஒன்றிய அரசு புறக்



கணித்து வருகிறது. மக்கள் தொகையில் குறைந்தும், சட்டமன்றம் இல்லாத யூனியன் பிரதேசங்களுக்கு அளிக்கும் நிதியைக் கூட புதுச்சேரிக்கு அளிக்க ஒன்றிய அரசு முன்வரவில்லை.

**பயிர் பாதுகாப்பு கேள்விக்குறி!**

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஒன்றிய குழு நேரில் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டும், புதுச்சேரி அரசு கோரிய ரூ. 760 கோடி நிதியை கொடுக்காமல் ஒன்றிய அரசு வஞ்சித்துள்ளது.

பெஞ்சல் புயலால் சேதமடைந்த தடுப்பணைகள், பாலங்கள், சாலைகள் இன்னும் செப்பனிடப்படாமல் இருக்கிறது. விவசாய பயிர் பாதுகாப்பு என்பது புதுச்சேரியில் கேள்விக்குறியாகி உள்ளது. இந்தியாவில் எந்த மாநிலமும் விவசாயிகளுக்கு பங்களிப்பு என்பது கிடையாது. ஆனால் புதுச்சேரியில் அரசின் பங்களிப்பு இருந்தும் விவசாயிகளுக்கு எந்த பலனும் கிடைக்கல. சிறு விவசாயி, பெரு விவசாயி என அனைவருக்கும் விவசாய கடன் தள்ளுபடி என்று அறிவித்துவிட்டு அதை ஒரு தரப்பினருக்கு மட்டும் தள்ளுபடி செய்திருப்பது விவசாயிகளை வஞ்சிப்பதாகும்.

**95 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெறாத நிலை!**

புதிய தொழில் கொள்கை மூலம் பல தொழிற்சாலைகளை கொண்டு வந்து வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம். பஞ்சாலைகளை ஒருங்கிணைத்து படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக் கூடிய ஜவுளி பூங்கா அமைப்போம். ஐடி பார்க் கொண்டு வருவோம் என்று ஒவ்வொரு பட்ஜெட்டிலும் சொல்லப்படுகிறதே தவிர செயல்பாட்டுக்கு வரவில்லை.

கூட்டுறவு சர்க்கரை ஆலையை திறப்போம் என்று கடந்த பட்ஜெட்டில் அறிவித்தார்கள். இன்னும் திறக்கவில்லை. புதுச்சேரி விமான ஓடுதளம் விரிவாக்கம், துறைமுக விரிவாக்கம், புதிய இரயில் வழித்தடங்கள் என எந்த திட்டமும் செயல்பாட்டிற்கு வரவில்லை. புதிய கல்விக்கொள்கையை திணித்ததின் காரணமாக இன்று புதுச்சேரியில் 95 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெறாத நிலை ஏற்பட்டுள்ளது.

புதுச்சேரியில் இரட்டை என்ஜின் பூட்டிய ஆட்சி நடக்கிறது. ஆனால் ஒன்றிய பட்ஜெட்டில் புதுச்சேரியின் வளர்ச்சிக்கான எந்த திட்டமும் அறிவிக்கப்படவில்லை. குறிப்பாக மேம்பாலங்கள், இரயில் திட்டங்கள், சுற்றுலா வளர்ச்சி என அறிவிப்பு செய்த எதையும் செயல்படுத்த ஒன்றிய அரசு முன்வரவில்லை. ஆளும் மாநில அரசும் வலியுறுத்தி பெற நடவடிக்கை எடுக்கவில்லை.

இப்படி புதுச்சேரி மக்களை ஏமாற்றும் இரட்டை என்ஜின் பூட்டிய என்.ஆர். காங்கிரஸ் - பா.ஜ.க. அரசுகளின் கூட்டுச்சதியை கண்டித்து இன்று தி.மு.க. மற்றும் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளோம்.

புதுச்சேரி மக்கள் விரும்பாத ரெஸ்டோ பார்கள், புதிய மதுபான ஆலைக்கு அனுமதி கொடுத்து மக்களை முகம்சுளிக்க வைத்துள்ளீர்கள். இதனை தி.மு.க. கடுமையாக எதிர்க்கிறது. இதுகுறித்து நிதிமன்றம் சென்றுள்ளோம். சட்டப்பேரவைத் தலைவர் மீது சுயேட்சைகள் ஆட்சிக்கு ஆதரவான நிலைபாட்டில் இருந்துவிட்டு இன்று சுயலாபத்திற்காக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவதை கொள்கை இயக்கத்தின் வழி செயல்படும் தி.மு.க. அதற்கு என்றும் துணை நிற்காது. ஆளும் கட்சிக்கு ஆதரவாக தி.மு.க. செயல்படவில்லை. மக்களை பாதிக்கின்ற எந்த செயலாக இருந்தாலும் தி.மு.க. முதலில் களம்காணுமே தவிர, வெற்று அரசியல் செய்யாது என இரா.சிவா பேட்டியளித்தார்.

பேட்டியின்போது, சட்டமன்ற கட்சித் துணைத் தலைவர் ஏ.எச்.எம். நாஜிம், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத், நாக. தியாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

### அய்யன் ஏரி தூர்வாரும் பணிக்கு அடிக்கல்!

# கடலூர் மாவட்டம் - தாழை ஓடையில் புதிய பாலம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், பிப். 13-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் கடலூர் மாவட்டம், வடலூர் நகராட்சியில் அமைந்துள்ள அய்யன் ஏரியினை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் மற்றும் 15வது மத்திய நிதிக்குழு திட்டங் களின் கீழ் ரூ.192.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி புனரமைப்பு பணிக்கு நேற்று முன்தினம் (11.02.2025) அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், முன்னிலையில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி பேரூராட்சியில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் அயன் குறிஞ்சிப் பாடி தாழை ஓடையில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

முன்னதாக வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 154ஆம் ஆண்டு ஜோதி தரிசன விழாவினை முன்னிட்டு வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் ஜோதி தரிசனத்தினை வழிபட்டார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களால் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் மற்றும் நகர்ப்புற,கிராமப்புற பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் வடலூர் நகராட்சியில் சாலை மற்றும் குளம் புனரமைப்பு பணி, பள்ளிகளில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல், பூங்கா அமைத்தல் உள்ளிட்ட 34 பணிகள் முடிவுற்றுள்ளது. மேலும், ஆரம்ப சுகாதார நிலையம், சமுதாய கழிப்பறை, மழைநீர் வடிகால் அமைக்கும் பணி உட்பட 27 பணிகள் நடைபெற்று வருகிறது. வடலூர் நகராட்சி பகுதிகளில் வளர்ச்சி திட்டப் பணிகளாக ரூ.53.05 இலட்சம் மதிப்பீட்டில் 61 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடலூர் நகராட்சியின் கடலூர்-விருத்தாச்சலம் தேசிய நெடுஞ்சாலையின் அருகே உள்ள அய்யன் ஏரி 77200 சதுர மீட்டர் பரப்பளவை கொண்டது. அய்யன் ஏரி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்துவதற்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும், அய்யன் ஏரி புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதனால் நீர்பிடிப்பு அளவு அதிகரிப்பதுடன் அப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டமும் உயரும்.

குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சி திட்ட பணிகளாக கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம், நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம், 15ஆவது நிதி குழு மான்யம், நமக்கு நாமே திட்டம், மூலதன மானிய நிதி திட்டம், அம்ருத் 2.0 உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.16.27 கோடி மதிப்பீட்டில் 47 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ரூ.34 கோடி மதிப்பீட்டல் 14 திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

அயன் குறிஞ்சிப்பாடி பகுதியில் உள்ள விவசாய பெருங்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த தாழை ஓடை பாலம் தற்போது ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு இன்றைய தினம் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. 120 ஏக்கர் விவசாய நிலத்தின் அறுவடை பொருட்கள் மற்றும் இடுபொருட்களை கொண்டு சென்று விவசாயிகள் பயனடையும் வகையில் இப்பாலம் அமைந்துள்ளது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வடலூர் நகரமன்ற தலைவர் சிவக்குமார், துணைத் தலைவர் சுப்புராயலு, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், பேரூராட்சி துணைத் தலைவர் ராமர், உதவி இயக்குநர் பேரூராட்சிகள் வெங்கடேசன், வடலூர் நகராட்சி ஆணையாளர் ரஞ்சிதா, செயல் அலுவலர் பாலமுருகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### மாநில நிர்வாகிகள் – மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் பங்கேற்கும்

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு கூட்டம்!

## அணிச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, பிப்.13-’

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 17.02. 2025 (திங்கள்கிழமை) காலை 10 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: சிறுபான்மையினரின் பாதுகாவலர் கழகத் தலைவர்; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பாக.

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை கை. அங்கமுத்து
### பிப்ரவரி 13 (2014)



**தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராக குளித்தலை தொகுதியில் போட்டியிட்டபோது, குளித்தலை நகரக் கழகச் செயலாளராக பொறுப்பேற்றிருந்த இவர், தலைவர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.**


**கல்லக்குடி போராட்டத்தின்போது குளித்தலையில் கைதாகி, தலைவர் அவர்களுடன் திருச்சி மத்திய சிறையில் இருந்ததோடு, ‘நங்கவரம்’ போராட்டத்திலும் தலைவர் அவர்களுடன் கலந்து கொண்டவர். அத்துடன் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றவர்.**

**“மொழிப்போரில் பங்கேற்றது தனது கடமை” என்று சொல்லி, மொழிப்போர் தியாகிகளுக்கு அரசால் வழங்கப்படும் உதவித் தொகையை பெற்றுக் கொள்ளாமல் மறுத்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாச்சியார்கோவில் தி. இராமலிங்கம்
### பிப்ரவரி 13 (2009)



**பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சினாலும் – கொள்கையினாலும் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்க காலத்திலே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், தொடர்ந்து 48 ஆண்டுகளாக நாச்சியார்கோவில் கிளைக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**மன்னை நாராயணசாமி, கே.கே.நீலமேகம் மற்றும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக,நெருக்கடிகாலத்தில் மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**